## (ஒ) நெல் உற்பத்திச் செலவின் மீதான அளவை

இலங்கை மத்திய வங்கியானது, இலங்கையிலுள்ள நெல் உற்பத்திச் செலவை நிர்ணயிப்பதற்காக இலங்கை முழுவதற்குமான "மாதிரி அளவை" ஒன்றினை ஆரம்பித்துள்ளது. நெல் உற்பத்தி மீதான இத்தகைய அடிப்படைத் தகவல், எதுவித ஒழுங்கான முறையிலும் இதுவரையிற் சேகரிக்கப்படவில்லை. தற்போது, மட்டுப்படுத்திய வெளிக்களப் பரிசோதனைகளைத் தவிர, நாடு முழுவதிற்குமான ஒவ்வொரு உள்ளிடுகைகளுக்கும், அவற்றால் எற்படும் நெல் விளைச்சல்களுக்குமிடையேயுள்ள தொடர்பு பற்றி ஒரு பொதுப்படையான கருத்தை மட்டுமே நாம் கொண்டுள்ளோம். கூடியளவு செவ்வியதும், தரம்வாய்ந்ததுமான தரவுகள், ஊழியம், மூலதனம், வளமாக்கி, மற்றும் ஏனைய உள்ளிடுகைகள் ஆகியவற்றின் ஒப்பியல்பான முக்கியத்துவம் பற்றிய பாகுபாட்டிற்கும், அதிகரித்த நெல் விளைச்சல்களுக்காக இலங்கையில் திட்டமிடுவதற்கும், உதவ வல்லனவாம்.

நாட்டின் 22 மாவட்டங்களிலுமிருந்து எடுக்கப்பட்ட 600 கிராமங்களிலிருந்து 3000 காணித்துண்டுகள் மாதிரி அளவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதில், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து 5 காணித்துண்டுகள் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்து தேர்ந்தெடுத்த காணித்துண்டுகளின் எண்ணிக்கையானது, பயிர்ச் செய்கையின் கீழுள்ள பரப்பு, மாவட்டத்திலுள்ள காணித்துண்டுகளின் எண்ணிக்கை ஆகியவற்றுடன் தொடர்புடையதாக தேரப்பட்டது.

ஆரம்ப உழுகை தொட்டு பயிர் விளைவினை விநியோகிக்கும் காலம் வரையிலுள்ள சகல கட்டங்களிலும் எற்படுகின்ற நெல் உற்பத்திச் செலவின் சகல கூறுகளையும் பற்றிய தகவலைப் பெறுவதற்கு, விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் விரிவானதொரு விஞப்பத்திரம் தயாரிக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டின் சிறுபோக பருவத்தின்போது, குருணாகலை மாவட்டத்தின் சில காணித்துண்டுகளைப் பொறுத்த வரையில், வரைவு விஞப்பத்திரமொன்று பயன்படுத்தப்பட்டபின், பொருத்தமான திருத்தங்கள் அதிற் செய்யப்பட்டன.

இறுதியாக உருப்பெற்ற விஞப்பத்திரம், 20 தலைப்புக்களின் கீழ் தகவல்களைக் கோரியுள்ளது. இதன் பொதுப்பிரிவொன்றில், விவசாயியின் சூழல், நில உடைமை, வரிகள், மற்றும் இப்பருவத்தின்போது செய்யப்பட்ட வரிக்கொடுப்பனவுகளும் ஏனைய கொடுப்பனவுகளும், திருந்திய விவசாய முறைகளைப் பயன்படுத்தாமைக்கான காரணங்கள், கடன்பாடுகள், கடன் பெற்ற மூலம், பாவிப்பில் உள்ள மூலதனப் பொருட்களின் கையிருப்பு ஆகியன பற்றிய தகவல் கோரப்பட்டுள்ளது. மறு பிரிவில், பயிர்ச் செய்கையின் ஒவ்வொரு கட்டத்திற்குமுரிய ஒவ்வொரு தொழிற்பாட்டிற்குமான வாடகைக் கூலி, "அற்றன்" கூலி, சொந்தக் கூலி ஆகியவற்றின் பேரிலான செலவும், எருமைகள், இழுபொறிகளின் பேரிலான செலவும், அத்துடன் பயன்படுத்தப்பட்ட கூலியினது ஆள் வேலை நாட்களின் எண்ணிக்கையும் கோரப்பட்டுள்ளன. பயிர்ச் செய்கையின் இக்கட்டங்களாவன, ஆரம்ப உழுகை (முதலாம், இரண்டாம் உழவு, சேறுக்கல், முட்கலப்பையுழவு, வரம்பு திருத்துதல், வடிகால் அமைத்தல் முதலியன); நாற்று மேடைத் தயாரிப்பு (நாற்றுமேடை தயாரித்தல், வளமாக்கியிடுதல், விதைத்தல், களைபிடுங்குதல், நீர்ப்பாசனம்), நடுதல் (வீசி விதைத்தல், நாற்றுநடுதல் முதலியன); களைபிடுங்குதல் (கைகளினாலும், சுழல் பொறி உதவியுடனும் களைபிடுங்குதல், களை கொல்லி இடுதல்); பசளையிடுதல், பிற்பாதுகாப்பு, அறுவடை (அறுவடை செய்தல், சூடடித்தல், பதர் நீக்குதல், பைகளில் அடைத்தல்) என்பனவாகும். விஞப்பத்திரத்தின் வேறொரு பிரிவில், கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினது (விதை நெல், வளமாக்கிகள், களைகொல்லிகள் முதலியன) செலவு, அளவுகள் பற்றியும், அத்துடன் இலவசமாகப் பெற்ற பொருட்களின் உத்தேசப் பெறுமதி பற்றியும், போக்கு வரத்துச் செலவுகள்

பற்றியும் தரவுகள் கோரப்பட்டுள்ளன. இறுதியாக, இப்பருவத்தின்போது ஏற்பட்ட மூலதனச் செலவு விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் அளவை பெரும்போக பருவத்தையும் உள்ளடக்குவதாக, 1966ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, இப்போதும் தொடர்ந்து நடாத்தப்படுகின்றது. வினாப் பத்திரத்தைப் பூர்த்தியாக்குவதற்கென விவசாயத் திணைக்களத்தின் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்க்கு, தேர்ந்தெடுத்த காணித்துண்டுகளிலுள்ள விவசாயிகளுடன், பயிர்ச் செய்கையின் வெவ்வேறு கட்டங்களிலும் நேர்முக உரையாடல் செய்து தரவு சேகரிக்கும் பணி கொடுக்கப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தின் விவசாயப் போதனையாளர்களும், மத்திய வங்கியின் அலுவலாளர்களும் வெளிக்கள வேலையை மேற்பார்வையிடுகின்றார்கள். இவ்வேலை, 1967ஆம் ஆண்டு எப்பிறல் மாதமளவில் முற்றுப்பெறும். தரவுகள் பாகுபடுத்தப்பட்டு, ஆய்வின் பின், இவ் அளவையின் பேரிலான அறிக்கை இவ்வாண்டில் இறுதிப் பகுதியில் வெளியிடத் தயாராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.